**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.382/2016**

02.12.2021 -பி.வா.சா.1-திரு.முருகன்

**1,2,4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சர்வே எண்.84/1ல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 71 செண்ட் ஆகும். ஆதியில் சுக்கன் செய்யது முகம்மது லெப்பை என்பவருக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. சுக்கன் செய்யது முகம்மது லெப்பை 20.09.1924ல் முகம்மது முகைதீன் என்பவருக்கு எவ்வளவு இடம் அடமானம் எழுதிக் கொடுத்தார் என்றால் தெரியாது. அந்த அடமானத்தின் தன்மை பற்றி தெரியாது. நான் தற்போது எவ்வளவு இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4.53 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.84/1ன் மொத்த விஸ்தீரண நிலத்திற்கு இது வரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணமானது எஸ்.என்..எம்.முகம்மது முகைதீன் அடமானம் வகைக்காக தாக்கல் செய்த வழக்கு பதிவேடு ஆகும். அந்த வழக்கில் சுந்தர ராமய்யர் 3ம் பிரதிவாதியாக எதற்காக சேர்க்கப்பட்டார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எவ்வளவு அடமான தொகைக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. அந்த வழக்கில் உள்ள ஏ செட்யூல், பி செட்யூல் சொத்துக்கள் எஸ்.என்.எம்.முகம்மது முகைதீனால் முழுவதும் அடமானம் செய்யப்பட்டதா என்றால் அடமானம் செய்யப்பட்டது. அதில் ரூ.5,750/- டிகிரி வகைக்காக சரி செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ரூ.5,750/- க்காக தான் பி செட்யூல் சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் 2வது அயிட்டத்தை தான் முதலில் ஏலத்தில் விற்க வேண்டும் என்றும், தொகை தீரவில்லை என்றால் 1, 3 அயிட்டச் சொத்துக்களை விற்கலாம்

என குறிப்பிட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 2வது அயிட்டச் சொத்தை விற்ற பிறகு தொகை போதுமானதாக இருந்ததா, இல்லையா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 1, 3 அயிட்டச் சொத்துக்கள் பின்பு ஏலம் விடப்பட்டதா, இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1, 3 அயிட்டச் சொத்துக்கள் ஏலம் விடப்படவில்லை என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1ல் எத்தனை லாட் சொத்துக்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. அதில் லாட் 1, லாட் 2 ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. லா்ட்1, லாட்2ல் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதனால் ஏலத்தில் என்ன சொத்துக்கள் விற்கப்பட்டது, எந்த சொத்துக்கள் அனுபவம் எடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதனால் நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்கு சம்மந்தம் உள்ளதா, இல்லையா என்பது எனக்கு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் உள்ள விபரங்கள் தெரியால், அது வழக்கிற்கு சம்மந்தப்பட்டது என சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ள இயலாதது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ன் படி சொத்தை யார் ஏலம் எடுத்தார் என்றால் எஸ்.என்..எம்.முகம்மது முகைதீன் என்பவர் ஏலம் எடுத்தார். அவர் ஏலம் எடுத்ததற்கு நீதிமன்றத்தில் அனுமதி வாங்கினாரா என்பது தெரியுமா என்றால் அனுமதி வாங்கினார். அவ்வாறு அனுமதி வாங்கினார் என்பது பி.வா.சா.ஆ.1ல் துலங்காது என்றால் தெரியாது. யார் இடத்தில் சொத்தின் அனுபவம் வழங்கப்பட்டது என்ற விபரம் பி.வா.சா.ஆ.1ல் துலங்காது என்றால் அது பற்றி தெரியாது. வழக்கின் தாவா சொத்து இ.பி. வழக்கில் ஏலம் விடப்படவில்லை என்றும், அனுபவம் எடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கின் தாவா சொத்தை ஏலம் விட்டதற்கும், அனுபவம் எடுத்ததற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. ஏலம் எடுத்த பிறகு பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதா, இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் உண்மையில் ஏலம் எடுக்கவில்லை என்பதால் தான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொத்தின் அனுபவம் முழுவதும் செய்பு முகைதீன் தரகனார் வசம் தான் எல்லா காலத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அவர் இறந்த பிறகு அவரது வாரிசு வசம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1943ல் இருந்து 05.09.2013 வரைக்கும் இந்த சொத்திற்கான பட்டா யாரிடம் உள்ளது என்றால் எனக்கு எழுதிக் கொடுத்தவர் பெயரில் இருந்தது. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 1943ல் இருந்து 05.09.2013 வரை பட்டா செய்பு முகைதீன் தரகனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 05.09.2013ல் பட்டா யார் பெயரில் இருந்து யார் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் எனது முன் உரிமையாளர் பெயரிலிருந்து என் பெயருக்கு மாற்றப்பட்டது. பிராது தபசில் சொத்திற்கு தவறான முறையில் பட்டா எண் 123 1ம் பிரதிவாதி வகையறா பெயருக்கு யார் பெயரில் இருந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. சுக்கன் செய்யது முகைதீன் லெப்பை என்பவர் 09.05.1927ல் செய்பு முகைதீன் தரகனாருக்கு சர்வே எண்.84/1ன் உள்ள 3ஏக்கர் 41 செண்டையும் விற்று விட்டார் என்றால் சரி தான். எஸ்.என்..எம்.முகம்மது முகைதீன் என்பவர் சுக்கன் செய்யது முகைதீன் லெப்பை மீது அ.வ.எண்.250/1938 தாக்கல் செய்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த வழக்கு இந்த தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக அந்த வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை, இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக

சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த வழக்கில், இந்த தாவா சொத்து ஏலம் விடப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அது போல அந்த வழக்கில் இந்த தாவா சொத்தை வாழ்விப்பு பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. சர்வே எண்.84/1ல் உள்ள 3 ஏக்கர் 41 செண்ட் எந்த காலத்திலும் எஸ்.என்..எம்.முகம்மது முகைதீன் என்பவரால் வாழ்விப்பு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எஸ்.என்..எம்.முகம்மது முகைதீன் வாரிசுகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் 19.09.1943ல் வாழ்விப்பு பெற்று அனுபவித்து வந்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய வாழ்விப்பு பெற்ற தேதியிலிருந்து 65 ஆண்டு காலமாக பட்டாவில் எந்தவித பெயர் மாற்றமும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் வாழ்விப்பு எடுக்காததால் தான் 65 ஆண்டுகாலமாக நாங்கள் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எஸ்.என்..எம்.முகம்மது முகைதீனுக்கோ, வாரிசுகளுக்கோ எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லாததால் அவர்களிடமிருந்து கிரையம் பெற்றவர்களுக்கும் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. ஜே.ஹெச். அகமது என்பவரிடமிருந்து 1 ஏக்கர் 71 செண்டை நில உச்சவரம்பு சட்டத்தில் இருந்து எடுத்ததால் ஜே.ஹெச் அகமது அலிக்கு சொத்தில் உரிமை ஏற்பட்டதாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அது போல மீதி நிலத்தை வீட்டு மனைகளை உட்பிரிவுகளாக பிரிக்க சென்னை நகர ஊரமைப்பு இயக்குநர் அனுமதி வழங்கியதால் சொத்தில் உரிமையோ, அனுபவமோ ஏற்படக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

***(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்பட்டது)***

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.382/2016**

08.12.2021 -வா.சா.1-திரு.முருகன்

**1,2,4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எஸ்.என்.எம்.முகம்மது மைதீன் வாரிசுகள் சர்வே எண்.84/1ல் நிலத்தினை வா.சா.ஆ-1 மூலம் ஏலம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது போல வா.சா.ஆ.1ன் படி அவர்கள் சர்வே எண். 84/1 நிலத்தை வாழ்விப்பும் பெறவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் சம்பந்தமாக கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அதிகாரி ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். அந்த உத்தரவின் மேல் நீதிப்பேராணை எண்.279/2009ன் உத்தரவின் படி உரிமையியில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எஸ்.என்.எம்.முகம்மது மைதீன் அவர்கள் செய்பு அபுபக்கர் தரகனாருக்கு கொடுத்த கிரையமும், அவர் அப்துல் ஹை என்பவருக்கு கொடுத்த கிரையமும், அவர் முகம்மது அப்துல்லா தரகனாருக்கு கொடுத்த கிரையமும், அவர் ஜெ.ஹச் முகம்மது அலி தரகனாருக்கும் முகைதீன் பாத்திமாவுக்கும் கொடுத்த கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல. முகைதீன் பாத்திமாவின் வாரிசுகளிடம் நாங்கள் பெற்ற கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல. அது போல மேல சொன்னவர்கள் சர்வே எண்.84/1ன் அனுபவத்தை பெற்றதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எல்லா காலங்களிலும் செய்கு முகைதீன் தரகனாரும் அவரது வாரிசுகளும் சர்வே எண்.84/1ன் உரிமையாளர்களாக அனுபவத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் எழுதி கொடுக்க எல்லா உரிமையும் உண்டு என்றால் சரியல்ல. 1990ல் பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திய அடமானம் செல்லும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் தாவா சொத்திற்கு தீர்வை செலுத்தி ரசீது பெற்று அனுபவித்துவருகிறார்கள் என்றால்

சரியல்ல. 1.11.2016ல் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ய முற்பட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய் என்றால் சரியல்ல. சுவாதீனம் பரிகாரம் கோராமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிகக்கப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண். 382/2016

2021 வது ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் நாள் P.W2ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.மாரிபாண்டி | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.நாராயணன் | கிராமம் : | |
| வயது : | 52 | மதம் : | |

**<u>15.12.2021 முதல் விசாரணை:</u>** நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 382/2016**

17.03.2022 – வா.சா.2 திரு.மாரிபாண்டி

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை. வாதி முருகன் தான் என்னை சாட்சியம் அளிக்க சொன்னார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வாதி எனது நெருங்கிய நண்பர். 26.07.2004 ஆவணப்படி தபசில் சொத்து வாதிக்கு பாத்தியம் என கூறினால் சரிதான். அதற்கு முன்பாத்தியஸ்தர்கள் யார் என்றால் முகைதீன் பாத்திமா பீவி வாரிசுதாரர்கள். அடமானம் சம்பந்தமாக வழக்கு நடந்து அந்த வழக்கில் தபசில் சொத்தை முன்பாத்தியஸ்தர்கள் ஏலத்தில் எடுத்தனர். நீதிமன்ற நிறைவேற்றுதல் நடைவடிக்கையில், ஏல சான்றிதழில் இந்த தாவா சொத்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் ஏல சான்றுகளில் தாவா சொத்து குறிப்பிட்டுள்ளது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வீட்டு மனையாக உள்ளது. எந்த கட்டுமானமும் ஏற்படுத்தப்படவில்லை. நான் தாவா சொத்து காலிமனையாக இருக்கும் போது அது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை எவ்வாறு கூறினேன் என்றால் வாதி தான் பராமரித்து வருகிறார். வாதி எனது நண்பர் என்பதால், அவர் தபசில் சொத்தை பராமரித்து வருகிறார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், அவர் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கும், பிரதிவாதிக்கும் 2016ம் ஆண்டில் தான் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக தவறாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 382/2016**

2022 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ம் நாள் D.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.செய்யது முகம்மது புகாரி | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.மர்ஹீம் செய்பு முகைதீன் பிச்சை | கிராமம் : | |
| வயது : | 63 | மதம் : | |

**08.08.2022 முதல் விசாரணை:** நான் 1ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 382/2016**

23.11.2022 – பி.வா.சா.1 திரு. செய்யது முகம்மது புகாரி

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

15.02.2017 தேதியிட்ட மதுரை உயர்நீதிமன்ற W.P.No.279/2019 ல் பிறந்த உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். சிட்ட நகல் பி.வா.சா.ஆ 2 ஆகும். தீர்வை ரசீது பி.வா.சா.ஆ.3 ஆகும். 21.08.1990 தேதியிட்டு காஜாத மைதீனுக்கு, செய்புமைதீன் பிச்சை மற்றும் இருவர் எழுதி கொடத்த அடமான கடன் பத்திரம் பி.வா.சா.ஆ.4 ஆகும். 27.03.2003 தேதியிட்ட பாளையங்கோட்டை சுற்றுக்குழு துணை ஆய்வாளர் தபசில் சொத்து சம்பந்தமாக பிற்ப்பிக்கப்பட்ட அறிவிப்பு 5 எண்ணிக்கை பி.வா.சா.ஆ–5 ஆகும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 382/2016**

03.01.2023– பி.வா.சா.1 திரு.செய்யது முகம்மது புகாரி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சர்வே எண்.84/1 ன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 41 சென்ட் என்றால் சரிதான். அது ஆதியில் சுக்கன் செய்யது முகம்மது லெப்பை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுக்கன் செய்யது முகம்மது லெப்பை தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை முகம்மது மைதீன் என்பவரிடம் அடமான கடனை பெற்று கொண்டு 20.09.1924 ல் ஒரு அடமான ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அடமான கடனை உட்படுத்தி சுக்கன் செய்யது முகம்மது லெப்பை 09.05.1927 ல் செரிப் முகைதீன் தரகனார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.
2. முகம்மது முகைதீன் வாதியாக இருந்து சுக்கன் செய்யது முகம்மது லெப்பை மற்றும் செரிப் முகைதீன் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து அ.வ.எண்.250/1938 என்ற வழக்கை திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 28.02.1939 ல் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் நிலை தீர்ப்பாணையை அனுசரித்து 05.12.1939 ல் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
3. அவ.எண்.250/1938 பற்றிய விபரத்தை வாதி பிராதில் கூறியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கை பற்றிய விபரங்கள் உண்மையா பொய்யா என்று விசாரணை செய்தேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதில் உள்ள விபரங்கள் தவறு. அந்த வழக்கைபற்றி யாரிடம் எப்போது விசாரணை செய்தேன் என்றால் ஆதியில் இருந்து பட்டா ஆவணங்கள் எங்கள் பெயரில் உள்ளது. அந்த வழக்கில் நிறைவேற்றுதல்

மனு எண்.581/1942 மூலம் தாவா சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் சர்வே எண் தவறு. நிறைவேற்றுதல் மனு எண்.581/1942 சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த நிறைவேற்றுதல் மனுவில் உள்ள சர்வே எண் தவறு என காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் முகம்மது மைதீன் வாரிசுகள் 11.12.1942 ல் நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் தவறு. 11.12.1942 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. ஏல கிரையம் 13.1.1943 ல் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்ட விபரம் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

5. மேற்படி ஏல கிரையத்தை அனுசரித்து முகம்மது மைதீனின் வாரிசுகள் தாவா சொத்தான சர்வே எண்.84/1 ஐ சுவாதீனம் பெற இ.ஏ.எண்.827/1943 தாக்கல் செய்து அதில் நீதிமன்றம் மூலமாக 19.09.1943 ல் வாழ்விப்பு பெற்றதாக வாதி பிராதில் கூறியுள்ளது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் ஏலமே என்னுடைய இடத்தை பற்றி நடக்கவில்லை. அ.வ.எண்.250/1938 ன் வழக்கு பதிவேட்டை வழக்குடன் தாக்கல் செய்துள்ளார். அதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த வழக்கு பதிவேட்டில் வாழ்விப்பானது 11.10.1943 ல் பதிவு செய்யப்பட்டுள்ளதை நான் பார்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

6. நான் 09.05.1927 ல் கிரையம் பெற்ற செரிப் மைதீன் என்பவரின் வாரிசு. 19.09.1943 க்கு பின்பு பல கிரையங்கள் தாவா சொத்தை குறித்து ஏற்பட்டது என்றால் சரிதான். 31.10.1943 ல் செயிபு அபுபக்கர் தரகனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் என் மூதாதையரிடம் இருந்து கிரையம் பெறவில்லை. தாவா சர்வே எண்ணை பொறுத்து 15.04.1944, 24.12.1945 மற்றும் 29.01.1967 கிரைய பதிவுகள் பற்றி

தெரியுமா என்றால் தெரியாது. 1927ம் ஆண்டிற்கு பிறகு தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வில்லங்க சான்றிதழை வாதி தாக்கல் செய்துள்ளார். அதை படித்து பார்த்து, அதில் உள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சர்வே எண்ணை குறித்து நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட 1 ஏக்கர் 70 சென்டிற்கு சர்வே எண்.84/1பி என்றும், மீதம் உள்ள 1 ஏக்கர் 71 சென்டிற்கு சர்வே எண்.84/1ஏ என உட்பிரிவு செய்தனர் என்றால் சரியல்ல. நில உச்ச வரம்பு ஆர்ஜிதம் செய்வதற்கு விசாரணை செய்யப்பட்டேனா என்றால் இல்லை. எனக்கோ எனது மூதாதையருக்கோ நில ஆர்ஜிதம் அலுவலகத்திலிருந்து அறிவிப்பு ஏதும் வந்ததா என்றால் இல்லை.

8. சர்வே எண்.84/1ஏ–ல் கண்ட 1 ஏக்கர் 71 சென்ட் நிலம் முகைதீன் பாத்திமாள் பீவி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முகைதீன் பாத்திமாள் பீவிக்கு யார் யார் வாரிசுகள் என பிராதில் வாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி விசாரிக்கவில்லை.